செ.வெ.எண். 26/பிப்ரவரி தேதி : 08.02.2017

**தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய்த் துறையின் சார்பில் பணி நியமனம் செய்யப்பட்ட உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு நில அளவை மற்றும் நில வாரிய திட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**




தருமபுரி மாவட்டத்தில் வருவாய்த் துறையில் ஏற்கனவே பணி நியமனம் செய்யப்பட்ட உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட பயிற்சி வழங்கப்படவில்லை. தற்போது தமிழக அரசால் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் பயிற்சி வழங்க ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து 30 நாட்களுக்கு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட பயிற்சி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. கே. ராஜம்மா, உதவி இயக்குநர் (நில அளவை) திரு. க. மனோகர், ஆய்வாளர் திரு. கே. துரைசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.